தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, தை 8, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஜனவரி 22, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்"

தம்மால் எதைச் செய்ய முடியும் என்பதையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து, செயலில் சோர்வடையாமல் தொடர்ந்து முயல்கிறவர்களுக்கு முடியாத செயல் என எதுவும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

மின் வாரியப் பிரிவு அலுவலகம்

***53559—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. ஆனந்தூர் மின் நுகர்வோர்களுக்கான பிரிவு அலுவலகம், ஆனந்தூரிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கல்லாவி எனும் இடத்திலுள்ள பிரிவு அலுவலகத்தின்கீழ் தற்போது இயங்கி வருகிறது. கல்லாவி பிரிவு அலுவலகத்தின்கீழ் 128 மின்மாற்றிகள் உள்ளன. புதிய பிரிவு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமானால் வாரிய விதிகளின்படி 126 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆனந்தூரில் 15 மின்மாற்றிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. எனவே, ஆனந்தூரில் புதிய பிரிவு அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில், 234 தொகுதிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இனி வருங்காலங்களில் எதிர்க்கட்சிகள் உட்காருவதற்கு இடமில்லை, அனைத்து இடங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் மின் வாரியப் பிரிவு அலுவலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலாவது அமைத்துத் தர முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

2016 ஜனவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமானால், பொதுவாக வாரிய விதிகளின்படி குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆனந்தூரில் 15 மின்மாற்றிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வருங்காலத்தில் மின்மாற்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், அங்கே மின் தேவையும் அதிகரித்து, அதற்குரிய கட்டமைப்பு வசதிகளும் மேம்படுமானால், அந்தப் பகுதியில் 126 மின்மாற்றிகள் வருகின்றபோது புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

குளிர்பதனக் கிடங்கு

***53060—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இந்திரவனம் ஊராட்சியில் வேளாண் விளைபொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?